பக்த சரித்திர மாலிகை - மலர் 2

# சுந்தரமூர்த்தி

பட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசி

ஸ்ரீமான் S. தண்டபாணி செட்டியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது] 1926 [விலை ஓர் அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS.

# முன்னுரை

எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பெருக்கத்தால் பக்த சரித்திர மாலிகையின் இரண்டாவது மலராக சுந்தரமூர்த்தி என்னும் இப் புத்தகம் வெளிவருகின்றது. இதைப்போன்ற இம்மலரில் வெளிவரும் சிறு புத்தகங்களைப் படிக்கும் பெரியோருக்கும் சிறியோருக்கும் மனத்தில் சமயவுணர்ச்சி வளர்வது திண்ணம். அவை தமிழ் நடை பயிலும் மாணவருக்கும் பயன்படுமென்பதும் ஒருதலை. ஆன்றோர் சரிதைகளைச் சுருக்கமாய் வரைந்து இத்தகைய சிறு புத்தகங்களாக ஆங்கிலத்தில் வெளியிடுவதும், அவற்றைக் கையாள்வோர் களிபுறுவதும் அறிந்துள்ளோர் இதனையும் கைக்கொள்வர்.

எஸ். தண்டபாணி.

# சுந்தரமூர்த்தி

1. தண்கயிலை யகன்றிங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விரன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

2. செப்பலருங் குண்டையூர் நெல்ல ளைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்த நாத
னொப்பிறனித் தூதுவந்தா றாடு கீறி
யுராமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.

## 1. பூர்வ சரிதை

ஸ்ரீ கைலாசகிரியிலே அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாயும் அன்பருக் கன்பாயு முள்ள பரமேசுவரானது திருச்சன்னிதானத்தில், அக் கடவுளுக்குத் தொண்டுசெய்வதே அருங்கடனாகக் கொண்ட அடியார் கூட்டத்துள் ஆலால சுந்தரர் என ஒருவர் உளர். அவர்

ஆதிகாலத்தில் ஒரு சமயம் ஈசுவரனுக்குச் சாத்தும் பொருட்டுப் புஷ்பம் கொணர்வான் வேண்டி நந்தவனம் அடைந்தார். அடைதலும், உமாதேவியாரின் சேடியர்க ளாகிய அநிந்திதை கமலினி என்னும் பெயருடைய இரு வனிதையர் அவ் வுய்யானத்தில் திருத்தேவியாரை அலங்கரிக்கப் புஷ்பம் கொய்து நின்றனர். அவர்கள் வனப்பைக் கண்ட சுந்தரர் அறிவிழந்து மெய்ம்மறந் தனர். நங்கைய ரிருவரும் சுந்தரரின் வனப்பைக் கண்டு தாமும் மோகித்து, பின்பு ஒருவாறு மனத்தைத் திருப் பிப் புஷ்பம் கொய்து சென்றனர். சுந்தரரும் அவ்வாறே புஷ்ப மெடுத்துக்கொண்டு சன்னிதானம் அடைந்தனர். பின்னர், எப்பொருளிலும் எவ்விடத்திலும் எவர் மனத் திலும் பிறிவற இயக்கம் செய்யும் இறைவன் நந்தவனத் தில் நடந்த விஷயங்களுக்குச் சினந்து சுந்தரரை நோக்கி, 'நீ பெண்கள்மேல் இச்சைவைத்தாய்; ஆகை யால் பூமியில் பிறந்து அவர்களின்பத்தை யனுபவிக்கக் கடவாய்' என்றனர். இதைச் செவிமடுத்த சுந்தரர் இடியுண்ட சர்ப்பம்போல் கலங்கி இறைவனது பாதபங் கயங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, 'எம்பிரானே, ஏழை செய்த குற்றத்தை மன்னித்து, சிறியேன் மண் ணில் பிறந்து பிரபஞ்சமாயையிற் பட்டுழலுங்கால் தடுத் தாட்கொள்ளல் வேண்டும்' என இறைஞ்சினார். கடவு ளும், 'அவ்வாறே யாகுக' என அருளினார்.

## 2. அவதாரம்

பின்பு, சுந்தரர் எந் நாட்டிலும் மிக்க செல்வமும் சீரும் பெற்ற புண்ணிய பூமியாகிய நம் பாதகண்டத்தில் அமிழ்தினு மினிய தமிழ் மொழி திகழும் தென்னாட்டைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரென்னும் திவ்வியக்ஷேத்திரத்தில் அந்தணகுல திலகரும் சைவசமயமே மெய்ச்சமயமென உணர்ந்து அறநெறி கடைப்பிடித் தொழுகி வருவோருமான சடையனார் என்னும் சிவாசாரியருக்கும் அவர் தம் இல்லறக் கிழத்தியாம் இசை ஞானியாருக்கும் திருக் குமாரராய் அவதரித் தருளினார். சடையனார் தெய்வத் தன்மை வாய்ந்த தமதருமைத் திருமகவுக்கு நம்பியாரூரர் என்று நாமகரணம் செய்து வளர்த்து வருவாராயினர். அம் மகவு ஒரு நாள் வீதியில் விளையாடிக்கொண் டிருக்கையில் அந்நாட்டின் அரசர் பவனி வந்தவர் அதனைக்கண்டு வியந்து, இப்பேரழகு வாய்ந்த பிள்ளையைத் தமது வளர்ப்புப் புத்திரராக வைத்துக்கொள்ள வேண்டுமென விழைந்து, சடையனாரைக் கண்டு சங்கதியைச் சொல்லி அவர் சம்மதத்தின்பேரில் அப் பிள்ளையை அழைத்துக் கொண்டு போய்த் தமது அபிமான புத்திரராக பாவித்து வளர்த்து வந்தார். அப் பிள்ளையும் வளர்பிறைச் சந்திரனேபோல் வளர்ந்து தக்க காலத்திலேயே உபநயனம் செய்விக்கப் பெற்று வேதங்களை ஓதிச் சகல நூற் கேள்விகளிலும் வல்லவராய்த் தேர்ந்து விவாகம் செய்தற்குத் தக்கதான வாலிபப் பருவத்தை அடைந்தார்.

## 3. தடுத்தாட்கொள்ளல்

இது இப்படியிருக்க, நம்பியாரூரரின் தந்தையாரான சடையனார் தம் புத்திரர்க்கு மணவினை முடிக்கத் தக்க வயது ஆனமை கண்டு தமது உறவினருள் ஒரு மாதைப் பேசி நிச்சயித்துக் கல்யாணத்திற்கு ஏற்பாடும் செய்தார். ஒரு சுபதினத்தில் கல்யாணம் செய்ய ஏற்பாடாகி மணமகனாகிய நம்பியாரூரர் அசுவத்திலேறிப் பவனிவந்து மணவறையை அடையும் சமயம், அடியார்க் கடியாராகிய பரமேசுவரன் தாம் முன்னம் சுந்தரரை தடுத்தாட் கொள்வதாகச் சொன்னதை நினைவு கூர்ந்து ஒரு வயோதிக பிராமண வேடத்துடன் மணவறையை யணுகி அங்குள்ள யாவரையும் விளித்து, தமக்கும் நம்பியாரூரருக்கும் ஒரு வழக்குள தென்றும் அதை அக்கணமே தீர்த்து வைத்தல் வேண்டும் என்றும் முறையிட்டார்.

இது கேட்ட நம்பியாரூரரும் மற்றையோரும், 'உளதாயின் கூறுக, கேட்கலாம்' எனலும், ஈசுவரன் 'ஐயா இந்த நம்பியாரூரன் என தடிமை. இவன் பாட்டன் எனக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளான்' என்றியம்பினார். அது கேட்ட யாவரும், 'பிராமணர் அடிமையாவது எங்ஙனம்?' என்று வியந்து கேட்க, நம்பியாரூரராகிய சுந்தரர் சினந்து, 'ஓய் பித்தரே, அடிமை யோலையைக் காட்டும்' என்றார். அதற்கு வேதியர் பொறுமையுடன், 'உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமைச் சாசனம் இதுவே' யென்று ஓலையை எடுத்தார். மிகுந்த கோபங்கொண்டிருந்த நம்பியாரூரராகிய சுந்தரர் ஓலையைப் பறிப்பதற்கு விரைந்தோடினார். இவர் ஓடிவரக்கண்ட கிழவேதியரும் முன்னே ஓடினார்.

சுந்தரமூர்த்தி விரைந்து சென்று வேதியர் கையி லுள்ள ஓலையைப் பற்றிக் கிழித்தார். உடனே வேதியர் கூக்குரலிட, பக்கத்தி லிருந்தவர்கள் வந்து விலக்கிவிட்டு வேதியரை நோக்கி, 'உலகிலில்லா வழக்காடும் வேதியரே, நீவிர் எவ்வூரி லுள்ளவர்?' என, வேதியர் தாம் திரு வெண்ணெ நல்லூரில் வசிப்பவர் என்றும், தம் ஓலையைக் கிழித்ததாலேயே சுந்தரமூர்த்தி தமது அடிமையே யென் பது நிதர்சனமாய் விளங்குகின்ற தல்லவா என்றும் சொன்னார். இதைக் கேட்ட சுந்தரர், 'ஐயரே, நீர் திரு வெண்ணெ நல்லூரில் உள்ளவராயின் ஆங்குள்ள வேதிய ரிடமே சென்று வழக்கைத் தீர்த்துக்கொள்வோம் வாரும்' என்றழைக்க, வேதியரும் 'நல்லதாயிற்று; ஆங்குள்ள மூல சாசனத்தைக் காட்டி என் கட்சியை ஸ்தாபிப் பேன்' என்று முன் நடந்தார்; மற்றையோரும் பின்னே சென்றனர்.

யாவரும் திருவெண்ணெ நல்லூரை அடைதலும், கிழவேதியர் ஆங்குள்ள அந்தணர்களை அணுகி, தமக்குச் சுந்தரன் அடிமை என்று தம் கக்ஷியைச் சொல்லி வா தாடினார். சுந்தரரும் அவர் கக்ஷியை முற்றும் மறுத்தே பேசினார். பின்னர், கிழவேதியர் 'ஐய, முன் என்னால் காட்டப்பட்டு இச் சுந்தரனால் கிழிக்கப்பட்டது மூல சாசனமன்று. அது பார்த்தெழுதிய கை ஓலை. இதோ இருக்கிறது மூலசாசனம். அதில் சுந்தரன் பாட்டனார் கையொப்பமிட்டு, அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத் திருக்கிறார்' என்று காண்பித்தார். அவ்வோலையை வேதி யர்கள் பார்த்து அது சுந்தரரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த அடிமைச்சாசனம் போல் எழுதப்பட் டிருப்ப தைக் கண்டு, அவர் எழுதியுள்ள இதர சாசனங்களையும்

ரவழைத்துப் பார்த்து, கையெழுத்து முதலியன யாவும் சரியா யிருக்கக் கண்டு, கிழவேதியரை நோக்கி, 'அந்தணரே, உம்முடைய சாசனத்தால் சுந்தரர் உமது அடிமையே யென்று விளங்குகிறது. ஆனால், நீர் இவ் வூரார் என்று சொல்லும், உம்முடைய இருப்பிடம் முதலியன எங்கே காட்டும் பார்ப்போம்' என்றனர். அம் முதியவரும் 'காட்டுகிறேன் வாருங்கள்' என்று யாவ ரையும் அழைத்துக்கொண்டு அவ்வூரிலுள்ள திருவருட் டுறை என்னும் சிவாலயத்துள் நுழைந்து மறைந்தார்.

பின்சென்ற யாவரும் ஆலயத்தினுட் சென்று பார்த்து ஐயரைக் காணாது ஆச்சரிய முற்றனர். சுந்தரரும் தம்மை அடிமை கொண்டவர் மாயமாய் மறையவே திகைத்து நின்றனர். உடனே பரமேசுவரன் இடபா ரூடராய்ப் பிரத்தியக்ஷமாகி, 'பக்தனே, நாம் முன் கொடுத்த வாக்குப்படி உலகமாயையில் உழலாமல் உன் னைத் தடுத் தாட்கொள்ளவே இவ்வேடத்துடன் வந் தோம். இனி நீ நம்மைத் தமிழ்ப்பாசுரங்களால் பாடிக் கொண் டிருப்பாயாக' என்றருளினர். சுந்தரரும், மெய் சிலிர்த்து, அடிபணிந்து, 'ஐயனே! அந்தகாரத்தில் மூழ்காவண்ணம் ஆட்கொண்ட துய்யனே!" என்று பற்பலவாறுய்ப் போற்றிப் புகழ, ஈசுவரனும், 'வன்சொற் களை நீ வழங்கியபடியால் நீ வன்றொண்டன் எனப் பெய ரடைவதுடன் என்னை முதலில் சொன்னபடி "பித்தா" என்று தொடங்கி முதலில் பாசுரம் பாடுவாயாக' என மொழிந்து மறைந்தனர். அவ்வாறே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருட் பெருக்கத்தால்,

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை

வைத்தாய்பெண்ணை தென்பால்வெண்ணை நல்லூரருட்டுறையு
ளத்தா வுனக்காளா யினியல்லே னெனலாமே

என ஆரம்பித்துப் பத்துப் பாசுரம் பாடியருளினார். பின்னர்ச் சுந்தரமூர்த்தி யாவற்றையும் விட்டு க்ஷேத்திரங்கள் ஒவ்வொன்றாய்ச் சென்று தமிழ்ப் பாசுரங்கள் பாடி ஈசுவரனைத் துதிப்பதையே அருங் கடனாகக் கொண்டார்.

இது இவ்வாறாக, இதற்குமுன் கைலாயத்தின் நந்தவனத்தில் சுந்தரரைக் கண்டு மோகித்த கமலினி என்னும் உமாதேவியின் சேடியார் திருவாரூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் உருத்திரகணிகையர் குலத்திலே பிறந்து அதிரூப சௌந்தரியமுடையவராய்ப் பரவையா ரென்னும் பெயருடன் பெதும்பைப் பருவ மடைந்திருந்தார். பல க்ஷேத்திரங்களுக்கும் சென்று தரிசனம் செய்துகொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார்கள் புடைசூழத் திருவாரூரை வந்தடைந்தார். அவ்வூரிலிருந்த பரவையார் வழக்கம் போல் சுவாமிதரிசனம் செய்யப் புறப்பட்டுச் சிவாலயத்தை அடைந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார். அக் காலை, சுவாமி தரிசனம் செய்யச் சென்ற சுந்தரமூர்த்தி, பரவையாரைக் கண்டு மோகித்து, பின் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உட்சென்றார். அவ்வாறே பரவையாரும் சுந்தரரைக்கண்டு மோகித்துத் தம தில்லம் சென்றார்.

மோகத்தி லீடுபட்ட சுந்தரர் உட்சென்று ஈசுவரனை வணங்கி, பரவையைத் தாம் மணம்புரிய அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்துத் தம் விடுதிக் கேகினார்.

வீடு சென்ற பரவையாரும் தாம் கண்டு மோகித்து வந்த பூமான் யார் எனத் தம் சேடியரைக் கேட்க, அன்னார் பரமேசுவரனுக்குத் தொண்டுசெய்யும் அடியவர் என்று சொல்ல, மெய்சிலிர்த்துப் புளகாங்கித மடைந்து, களைத்துச் சோகமடைந்தார். இரவில், எம்பிரானாகிய பரமசிவன் பரவையார் சொப்பனத்தில் தோன்றி, 'நீ எம் மடியவன் சுந்தரனை மணம் செய்துகொள்ளக் கடவாய்' என்றும், சுந்தரர் கனவில்தோன்றி, 'பரவையை வதுவை செய்துகொள்ளக் கடவாய்' என்றும், அடியார் திருக்கூட்டத்தவர்கள் கனவில் தோன்றி, 'சுந்தரனுக்கும் பரவைக்கும் மணம் செய்து வைப்பீர்களாக' என்றும் அருளிச் செய்தனர்.

அப்படியே அடியவர்கள் பரவையார்க்கும் சுந்தரர்க்கும் மணம் முடித்துவைத்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிறிது காலம் பரவையாருடன் சுகமாக வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் சுந்தரர் அடியவர்களைப் பாடவேண்டுமென்று எண்ணங்கொண்டு, 'பெருமை வாய்ந்த அடியார்களை அன்னார் பெருமைகளை விளக்கி எளியேன் எவ்வாறு பாடவல்லேன்' என்றுசொல்லி ஈசுவரனைத் துதிக்க, பெருங்கருணைத் தடங்கடலாகிய எம்பிரான் 'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க, சுந்தரரும் அவ்வாறே அடியார்களின் பெருமைகளை விளக்கித் திருத்தொண்டத்தொகை யென்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

பின்னர்ச் சுந்தரமூர்த்தி திருவாரூரிலேயே ஈசுவர தரிசனம் செய்துகொண்டு இருந்தார். சுந்தரமூர்த்தி

சுவாமிகளின் மகிமைகளைக் கேள்வியுற்ற குண்டையூர்க் கிழவர் என்பவர், அவரை அன்புடன் வழிபட்டுத் தினம் தினம் பரவையார் வீட்டுக்கு நெல், பருப்பு முதலிய பதார்த்தங்கள் அனுப்பி வந்தார். அந்தக் காலத்தில், ஒரு பெரும் பஞ்சம் உண்டாக, அடியவர்க்குத் தொண்டு செய்வதே அருங்கடனாகக் கொண்ட குண்டையூர்க் கிழவர் என்பார் நெல் கிடைக்காமல் வாடி, மிகவும் துயரத்துடன் நித்திரை செய்யப் போயினார். பரமேசுவரன் அவருக்குக் கனவில் தோன்றி, 'பக்தா, நாளை குண்டையூரில் நெல் பெரும் போராயிருக்கக் காண்பாய்' என்று சொல்லி மறைந்தார். மறுதினம் அவ்வாறே நெல்லிருக்கக் கண்ட குண்டையூர்க் கிழவர் இந் நெற்போரை எவ்வாறு ஆரூருக்கு எடுத்துச் செல்லவல்லோம் என்று வருந்தி, சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து விண்ணப்பம் செய்துகொண்டார். அவரும் ஈசுவர கடாக்ஷத்தால் பதிகம் பாடி, சிவகணங்களைக்கொண்டு அந் நென்மலையைத் திருவாரூருக்கு எடுத்து வரும்படி செய்தனர். இத்தகைய அற்புதங்களைப் புரிந்துகொண் டிருந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் ஒரு சமயம் திருப்புகலூரை அடைந்தனர். ஆரூரில், பங்குனி உத்திரத்திருநாள் சமீபிக்கவே, அத் திருவிழாச் செலவுக்குப் பரவையாருக்குக் கொடுப்பதற்குப் பொன் வேண்டுமென்று ஈசுவரனைத் துதித்து செங்கற்கள் சிலவற்றைத் தருவித்து அவற்றைத் தலையணையாகக் கொண்டு அன்றிரவு நித்திரை போயினார். மறுநாள் எழுந்து பார்க்க அச் செங்கற்கள் யாவும் பொற்கற்களாக இருக்கக் கண்டு இறைவன் திருவருளுக்கு வியந்து, பின் அப் பொன்னுடன் ஆரூரை அடைந்தனர்.

மற்றோர் சமயம் சுவாமிகள் திருமுதுகுன்றம் என்னும் தலத்தை யடைந்து தமக்குப் பொருள் வேண்டுமெனப் பதிகம் பாடினார். பாடியதும் இறைவனருளால் பன்னீராயிரம் பொன் கிடைக்கப் பெற்றுத் திருப்தி யடைந்ததுடன் பின்னும் அப்பொன், திருவாரூரிலுள்ளவர்கள் அதிசயிக்க, அவ்விடமே கிடைக்க அருள்புரிய வேண்டுமென்று ஈசுவரனைத் துதித்தார். ஈசுவர வாக்கும், 'அப் பொன்னை மணிமுக்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் போய் எடுத்துக்கொள்க' என எழுந்தது. அவ்வாறே சுந்தரமூர்த்தி மணிமுக்தாநதியில் பொன்னை யிட்டு, பூவுலகோர் புகழவும், யாவரும் அதிசயிக்கவும், திருவாரூர்க் குளத்தில் போய்ப் பொன்னைத் தேடி எடுத்துக்கொண்டார். இப்படியாகச் சுந்தரமூர்த்தி அருந்தமிழ் மொழியில் ஈசுவரனைப் பதிகம்பாடிப் பற்பல அற்புதங்கள் புரிந்துகொண் டிருக்குங்கால், முன் கைலாசகிரியில் சுந்தரமூர்த்தியைக்கண்டு மோகித்த இருவரில் அநிந்திதையார் என்பார் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர் குலத்திலுதித்த ஞாயிறு கிழவர் என்பவருக்குப் புத்திரியா யவதரித்து அதிக வனப்பும், குணங்களுமுடையவராய், சங்கிலியார் என்ற திருநாமத்துடன் கல்யாணம் செய்தற்குரிய பருவத்தை அடைந்திருந்தார். அவர் தந்தையான ஞாயிறு கிழவர் என்பவர், அவருக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்று பிரஸ்தாபித்ததை யறிந்து, தாம் எல்லாம் வல்ல மூர்த்தியாக விளங்கும் பரமேசுவரனது அடியவரி லொருவருக்கே மாலை சூடவேண்டும், அத்தகைய வரனை அடையும்வரை ஈசுவரனுக்கே திருப்பணி செய்துகொண் டிருத்தல் வேண்டுமென உறுதி செய்து தம் இஷ்டத்தைத் தம் தந்தையாருக்கு அறிவித்தார். இதைக் கேட்ட ஞாயிறு கிழவரும் சம்மதிக்க சங்கிலியார் திருவொற்றியூரை யடைந்து, அவ்வூரி

னுள்ள சிவாலயத்தில் புஷ்பம்கட்டி ஈசுவரனுக்குச் சாத்தும்படி கொடுத்தல் முதலிய பல திருப்பணிகள் செய்து கொண்டிருந்தார்.

இப்படியிருக்குங்கால் ஒரு சமயம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவொற்றியூருக்குச் சுவாமி தரிசனம் செய்யச் சென்றவர் ஆலயத்தில் சங்கிலியாரைக் கண்டு மோகித்து மணம் செய்துகொள்ள விரும்பினார். இதையறிந்த இறைவன், சங்கிலியாரின் கனவில் தோன்றி, 'சுந்தரன் என் அடியவன், அவனை நீ மணந்து கொள்வாயாக. ஆனால், உன்னைப் பிரிந்து ஆரூருக்குப் பரவைபால் செல்லாதவாறு சத்தியம் பெற்றுக்கொள்' என்று சொல்லி, பின் சுந்தரர்க்குத் தோன்றி, 'நீ விரும்பியபடியே சங்கிலி உன்னைக் கடிமணம் செய்துகொள்வாள். ஆனால் அவள் இஷ்டப்படி சத்தியம் செய்துகொடு' என்று சொல்லிப் போயினார். இறைவன் ஆஞ்ஞைப்படியே மறுதினம் சங்கிலியாருக்கு, 'உன்னைவிட்டுப் பிரியேன்' என்று சத்தியம் செய்து கொடுத்துச் சுந்தரர் சங்கிலியாரை மணந்துகொண்டார். இருவருமாகக் கூடிச் சிலகாலம் திருவொற்றியூரில் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் திருவாரூரிலிருக்கின்ற வீதிவிடங்கப் பெருமானுடைய வசந்தோற்சவகாலம் சமீபித்ததை அறிந்து, சுந்தரர் திருவாரூருக்குச் சுவாமி தரிசனம் செய்யப் புறப்பட்டார். திருவொற்றியூரை விட்டு நீங்கினமையால் அவர் சபதம் தவற, அதன் பயனாக அவருக்கு இரு கண்களும் மறைந்தன. சுவாமிகளுக்கு ஆரூர் செல்ல வேண்டுமென ஆசை மிகுந்திருந்தமையால் முன்னே சிலர் வழி காட்டிக்கொண்டு செல்லப் பல தலங்களில் சென்று சுவாமியை வணங்கிக்கொண்டு திருப்பூந்துருத்தி என்னும் ஸ்தலத்தை யடைந்து பரமசிவ னருளால்

கண்கள் செவ்வனே தெரியப்பெற்று மீண்டும் ஆரூரை யடைந்தனர்.

சுந்தரர் வருகையையறிந்த பரவையார் மருண்டு 'சங்கிலியை மணந்த சுந்தரர் எனதில்லம் வருதல் தகுதி யன்று' என்று கூறியனுப்பினர். அதைக் கேட்ட சுந்தரர் மிகவும் வியசனித்து ஈஸ்வர சன்னிதானத்தில் போய் மிகவும் வருந்தி முறையிட்டுக்கொண்டார். இறைவர் திருவுளங்கொண்டு அன்று இரவு அருச்சகர்போல் பரவையார் வீடு சென்றார். அவரைக் கண்ட பரவை யார், 'ஏது இவர் அர்த்த நிசியில் இவ்விடம்வரக் கார ணம்' என்று எழுந்துவந்து பார்த்தார். உடனே இறை வன் மறைந்தருளக்கண்ட பரவையார், 'ஐயோ ! என்ன அபவாதம் செய்தேன். இறைவரன்றோ தம் தொண் டார்க்குப் பரிந்து இத்தகைய வேடத்துடன் வந்தார் போலும்! இனியும் நாம் தாமதம் செய்தால் மோசம் வரும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் கூடி வாழவேண்டி யதே அவசியம்' என்றுசொல்லி, சுவாமிகளுக்குச் செய்தியைத் தெரிவித்தார். சுந்தரரும் பரவையில்லம் சென்று சுகமே வாழ்ந்து வந்தனர்.

இச் செய்திகளை யறிந்த திருப்பெருமங்கலவாசி யாகிய ஏயர்கோன் கலிக்காம நாயனர் என்னும் சிவபக் தா சுந்தரத்தைச் சினந்து அவரைப் பார்க்கலாகாதென விரதம் பூண்டிருந்தார். இதைச் சுந்தரர் இறைவருக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்.

சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனருக்குச் சூலைநோயுண்டாக்கி அதனல் அவர் வருந்தும்பொழுது சுந்தரனலன்றி வேறு யாவராலும் இந்நோய் தீர்க்க முடி

யாதென்று கனவில் சொல்லியருளிப் போயினர். கலிக் காமரோ உயிரைத் துறப்பினும் சுந்தரரைப் பார்ப்ப தில்லை என்று பிடிவாதமாயிருந்தார். இந்த விஷயத்தை யறிந்த சுந்தரர் தாமாகவே கலிக்காமர் நோயைத் தீர்ப்ப தற்காக அவர் இருப்பிடம் தேடிச் சென்றார். சுந்தரர் வருகையை யறிந்த கலிக்காம நாயனார் அவரைப் பார்க் கக்கூடாதென்ற பிடிவாதத்தால் கட்டாரியால் குத்திக் கொண்டு உயிர்துறந்தார். சுந்தரமூர்த்திவந்து இக்கோ ரத்தைக் கண்டு மனம் வருந்தித் தாமும் உயிர் துறக்க எண்ணங்கொண்டு கட்டாரியால் குத்திக்கொள்ளப் போகும் சமயம் இறைவனருளால் கலிக்காமர் உயிர்பெற் றெழ, இருவரும் நேசமடைந்து சிவனருளைத் துதித்து வாழ்ந்தனர். இவ்வாறாகச் சுந்தரர் பல அற்புதங்கள் புரிந்து பல க்ஷேத்திரங்கள் சென்று தரிசனம் செய்து கொண்டு, கொங்கு தேசம் சென்று திருப்புக்கொளியூர் என்னும் திவ்ய ஸ்தலத்தை அடைந்தார். அவ்வூரில் சுவாமி தரிசனம் செய்துகொண்டு ஒரு தினம் ஒரு வீதி வழியாய்ப் போய்க்கொண் டிருக்கையில் ஒரு மறையவர் தம் புதல்வனுக்கு உபநயனம் செய்வித்தமையால் அவர் இல்லம் வாத்திய கோஷத்துடன் சந்தோஷம் நிறைந்த தாய்க் காணப்பட்டது. அவ் வீட்டிற்கு எதிர் வீட்டிலோ அழுகைக்குரல் கேட்டது. இதைக்கண்டு வியப்புற்ற சுந்தரர் அதன் காரணம் யாது எனப் பக்கத்தி லுள்ளோ ரைக் கேட்க, அவ்வீட்டில் ஒரு குழந்தை யிருந்ததாக வும் அக் குழந்தைக்குச் சுந்தரமூர்த்தி என நாமகரணம் செய்திருந்ததாகவும், எதிர்வீட்டில் உபநயனம் செய்விக் கப்படும் குழந்தைக்குத் திருநாவுக்கரசர் என்று பெயர் என்றும், அக் குழந்தையும் சுந்தரமூர்த்தி என்னும் குழ ந்தையும் ஒரு சமயம் குளத்திற்குச் சென்றிருந்தபோது

சுந்தரமூர்த்தி என்னும் குழந்தை முதலைவாயில் அகப்பட்டு இறந்தது என்றும், பின்னர்த் திருநாவுக்கரசர் என்னும் குழந்தை தப்பி வந்து நாளடைவில் வளர்ந்து தற்காலம் உபநயனத்திற்குத் தக்கபருவம் வர உபநயனம் செய்விக்கப் படுகிறதென்றும் இறந்த சுந்தர மூர்த்தி என்னும் குழந்தை யிருப்பின் அந்த மகவுக்கும் உபநயனம் செய்து மகிழலாமே என்று அவன் பெற்றோர் வருந்துகின்றனர் என்றும் தெரியவந்தது. இதைக் கேட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அக்குழந்தை யிறந்த தடாகத்தைக் காட்டும்படி சொல்லி அங்குச் சென்று சிவபெருமானைத் துதிசெய்து அக்குழந்தை உயிர் பெறும்படி பதிகம் பாடினார். உடனே வற்றிப்போயிருந்த அத்தடாகத்தில் தண்ணீர் உண்டாகி முதலை வெளிவந்து குழந்தையை உயிருடன் வெளியில் விட்டது. என்னே! அடியவர்தம் மகிமை. இஃதன்றோ 'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை யுண்டபாலனை யழைத்ததும்' என்று திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர் வியந்து கூறுவதற்கு இடமாயினது. திருப்புக்கொளியூரில் யாவராலும் புகழப்பட்ட சுந்தரர் திருவஞ்சைக்களம் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து இறைவனைத் துதிசெய்ய, தேவரால் அனுப்பப்பட்டு இவரை வந்தடைந்த வெள்ளை யானையின்மீது ஆரோகணித்து சேரமான் பெருமானுடன் கைலாசத்திற்குச் சென்று சாயுச்சிய பதவியை அடைந்தார். இவர் சைவசமய பக்த சிரோமணிகளில் ஒருவர். இவரால் சைவசமயம் பரவியது இவர் சரிதையால் நாஸ்திகத்தின் இழிவும் சைவத்தின் மாட்சியும் அடியவர் பெருமையும் தெள்ளிதின் விளங்குவனவாகும்.

---

Printed at the Caxton Press, Madras—1926 (B)

## கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

# வாசக வரிசை

ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரும் அச்சம் இன்றி அக மகிழ்ந்து வாசிக்க அனுகூல மாகும்படி அல்வழியான விஷயம் சிறிதும் கலவாமல் இக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. பாடசாலை மாணவருக்கும் தமிழ் நடை பயில்வோர்க்கும் உபயோகமாக இதுபோன்ற சில சிறு புத்தகங்கள் மேலும் வெளிவரும். இனிய பாடல்கள் இடையில் விரவி வருதலின் இவை படிப்போர்க்கு இன்பம் பயக்கும். இத்தகைய நூல் வரிசைகள் பல அங்கிலத்தில் வெளிவருவதும், அவற்றைக் கையாள்வோர் களியுறுவதும், அறிந்துள்ளோர் இதனையும் கைக்கொள்வர் என்பது ஒருதலை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. நளன் — சூதுவிருப்பேல் | ... | 0 | 2 | 0 |
| 2. குசேலன்—வறுமையிற் செம்மை | ... | 0 | 2 | 0 |
| 3. புலவர் வறுமை ... | ... | 0 | 2 | 0 |
| 4. கண்ணப்பன் ... ... | ... | 0 | 2 | 0 |
| 5. விநோதக் கூற்றுக்கள் ... | ... | 0 | 2 | 0 |
| 6. கம்பரும் சோழனும் ... | ... | 0 | 2 | 0 |
| 7. அரிச்சந்திரன் ... ... | ... | 0 | 2 | 6 |
| தூரதேசத்துச் சிறுவர்கள் — | | | | |
| ஜப்பான்சிறுவர்கள் / சீனச் சிறுவர்கள் ... | ... | 0 | 6 | 0 |

## பஞ்சதந்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| மித்திரபேதம் ... ... | ... | 0 | 4 | 0 |
| சுகிர்ல்லாபம் ... ... | ... | 0 | 3 | 0 |
| சந்திவிக்கிரகம் ... ... | ... | 0 | 4 | 0 |
| லப்தஹானி ... ... | ... | 0 | 2 | 0 |

# தமிழ் நவீன கதைகள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| பன்னிரு நீதிக்கதைகள் .... ... | 0 | 10 | 0 |
| மாலிகா - பூஷணி ... ... ... | 0 | 10 | 0 |
| இராமமூர்த்தி ... ... ... | 0 | 10 | 0 |
| சிவான[illegible]ன் ... .. ... | 0 | 10 | 0 |
| நீல[illegible] ... ... ... | C | 10 | 0 |
| இரா[illegible] ... ... ... | 0 | 10 | 0 |
| ஸரஸா ... ... ... | 0 | 10 | 0 |
| இராமநாதன் (முதல் பாகம்) .. ... | 0 | 10 | 0 |
| இராமநாதன் (இரண்டாம் பாகம்) ... | 0 | 10 | 0 |
| கோஹர்ஜான் ... ... ... | 0 | 10 | 0 |
| சாரதாம்பாள் சரித்திரம் ... ... | 0 | 8 | 0 |
| சுயம்பிரகாசம் ... .. ... | 0 | 8 | 0 |
| வத்ஸலா ... .... | 0 | 8 | 0 |
| சிவகாமி ... ... ... | 0 | 8 | 0 |
| தியாகராயன் ... ... ... | 0 | 8 | 0 |
| நாகரத்னம் ... ... ... | 0 | 8 | 0 |
| பிஸாரோ (ஒரு துன்பியல் நாடகம்) ... | 0 | 6 | 0 |
| சீனிவாசன் ... ... ... | 0 | 6 | 0 |
| கற்புக்கரசி ... ... ... | 0 | 6 | 0 |
| காந்தாமணி ... ... ... | 0 | 6 | 0 |
| மோஹனை ... ... ... | 0 | 5 | 0 |
| காஞ்சனவல்லி ... ... ... | 0 | 5 | 0 |
| இராஹிமா ... ... ... ... | 0 | 5 | 0 |

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெரு, செ[illegible],